## ஒதுக்கீட்டுத் தலைப்பு 275 - மாவட்ட செயலகம் பொலன்னறுவை

## பொலன்னறுவை மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களின் கணக்குகள் சம்பந்தமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 01. மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(i) நியதிச்சட்ட கட்டளைச் சட்டங்களின் வாயிலாக ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்.

(ii) அரசாங்கத்தின் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் (சமூர்த்தி மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்) என்பனவற்றை அரசாங்கத்தின் விதிமுறைகள், ஆலோசனைகள், வழிகாட்டல் என்பவற்றிற்கு அமைய நடாத்துவதற்கு உறுதியளித்தல்.

(iii) மாவட்டத்தின் சகல அரச நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக மக்களின் அபிவிருத்திக்காக நிறைவேற்றப்படும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை செயலில் ஈடுபடுத்த தேவையான ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டல்

(iv) அரசாங்கத்தின் மாவட்டப் பிரதிநிதியாகச் செயற்படுதல்.

(v) மாவட்டத்தில் இயற்கை அனர்த்தம் அல்லது ஏனைய இடுக்கண் ஏற்படுமிடத்து நேரடிச் செயற்பாட்டில் ஈடுபட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### 2. மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

I. தமன்கடுவ பிரதேச செயலகம்

II. ஹிங்குரக்கொட பிரதேச செயலகம்

III. மெதிரிகிரிய பிரதேச செயலகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 134 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 42,825 | 41,825 | 1,000 |
| 139 | மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு | 1,531,791 | 255,450 | 1,276 ,341 |
| 145 | மீள்குடியேற்ற அமைச்சு | 6,612,445 | 5,620,807 | 991,638 |
| 152 | நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு | 1,857,890 | 1,848,659 | 9,231 |
| 153 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 1,134,200 | 146,220 | 987,980 |
| 156 | இளைஞர் விவகார அமைச்சு | 1,171,850 | 499,537 | 672,313 |
| 160 | சுற்றாடல் அமைச்சு | 745,000 | 227,000 | 518,000 |
| 201 | பௌத்த அலுவல்கள் திணைக்களம். | 7,410,905 | 7,057,422 | 353,483 |
| 206 | கலாசார அலுவல்கள் திணைக்களம் | 9,100 | 9,100 | - |
| 210 | தகவல் திணைக்களம் | 8,000 | 8,000 | - |
| 216 | சமூக சேவைத் திணைக்களம் | 1,332,750 | 1,351,829 | (19,079) |
| 217 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 1,765,270 | 1,721,709 | 43,561 |
| 218 | சமூர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 191,368,485 | 186,633,263 | 4,735,222 |
| 219 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | 1,333,115 | 719,700 | 613,415 |
| 226 | குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் | 1,815 | 1,710 | 105 |
| 252 | குடிசன மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் | 1,444,831 | 921,001 | 523,830 |

## (ஆ) பொது வைப்புக்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 02 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 84,779,572 ஆக இருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறு.

| நிறுவனம் | 2 வருடங்களுக்குக் குறைவு | 2 வருடங்களுக்கு மேல் 05 இற்குக் குறைவு | 5 வருடங்களுக்கு மேல் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| மாவட்ட செயலகம் | 16,825,903 | 4,349,989 | 727,608 | 21,903,500 |
| தமன்கடுவ பிரதேச செயலகம் | 11,407,140 | 43,817 | - | 11,450,957 |
| ஹிங்குரக்கொட பிரதேச செயலகம் | 7,831,244 | 2,106,540 | - | 9,937,784 |
| மெதிரிகிரிய பிரதேச செயலகம் | 9,533,376 | 2,209,547 | - | 11,742,923 |
| லங்காபுர பிரதேச செயலகம் | 6,867,540 | 811,148 | - | 7,678,688 |
| திம்புலாகல பிரதேச செயலகம் | 7,190,973 | 59,081 | - | 7,250,054 |

| | பிரதேச செயலகம் | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை அல்லது அளவு | காலப்பகுப்பாய்வு: 1 வருடத்திற்கு மேல் 3 இற்குக் குறைவு | காலப்பகுப்பாய்வு: 3 வருடங்களுக்குக் மேல் |
|---|---|---|---|---|---|
| i. | எலஹெர | வாகனம் | 01 | - | 01 |
| | | அலுவலக உபகரணம் | 20 | 19 | 01 |
| ii. | தமன்கடுவ | வாகனம் | 01 | - | 01 |
| iii. | ஹிங்குரங்கொட | வாகனம் | 03 | - | 03 |
| iv. | லங்காபுர | கட்டிடம் | 01 | - | 01 |
| | | வாகனம் | 01 | 01 | - |
| v. | திம்புலாகல | கட்டிடம் | 01 | - | 01 |
| | | | 28 | 20 | 08 |

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பீஎப்/ மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க 2010 திசெம்பர் 15 ஆந் திகதிய அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றுநிருபத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு அறிக்கை உரிய காலப் பகுதியினுள் சகல செயற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு 2011 மார்ச் 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மாவட்டச் செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| | எல்டீயூஎன்/1/3/2/2009 ஆம் இலக்க விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் சுற்றுநிருபம் | செயலகப் பிரிவுகளில் 376 அங்கத்தவர்களுக்கு ரூபா 4,700,000 கடன் பணம் வருடாந்தம் 5% வட்டியில் 10 தவணைகளில் அல்லது 10 மாதங்களில் கடன்தொகை செலுத்தப்பட்டு முடிவுறுத்த வேண்டுமெனவும் தவணைப் பணம் செலுத்தாதிருக்கும் பட்சத்தில் தவணைப்பணத்துடன் 5% தண்டப் பணம் செலுத்த வேண்டுமெனவும் தொடர்ந்து 04 மாதங்களுக்கு செலுத்தாதிருந்தால் பிணை யாளரிடமிருந்தேனும் அறவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் காட்டப்பட்டியிருந்த போதிலும் ஒரு கடன் தவணைப் பணமேனும் செலுத்தாத 24 அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 31,500 தொகையான கடன் பணமும், ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணபடுகின்ற 234 பேர்களிடமிருந்து ரூபா 1,799,300 தொகையான நிலுவைக் கடன் மீதியும் தொடர்பாக மேற்கூறப்பட்ட நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 2010 மே 22 ஆந் திகதிய பீஎப் - 443 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபம் | மாவட்ட செயலகம் | அரச நிறுவனங்கள் தமது எரிபொருள் தேவைகளைப் பெறும் போது கூட்டுறவுச் சங்கங்களின் எரிபொருள் நிலையங்களுக்கு முன்னுரிமை வழங்க |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவின் படி சமூக அடிப்படையிலான சங்கங்களுக்கு நேரடியாக ஒப்பந்தங்களைக் கையளித்தல் | செயலகம் | மூன்றிற்கு மேற்படலாகாது என்பதுடன் தற்போது கையளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் மொத்தப் பெறுமதி மற்றும் உத்தேச ஒப்பந்தங்களின் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2 மில்லியனை விஞ்சலாகாது என்ற போதிலும் அதற்கு முரணாக ஒரு சமூக அடிப்படையிலான சங்கத்திற்கு 2010 நவம்பர் 01 ஆந் திகதி முதல் நவம்பர் 11 ஆந் திகதி வரையான 10 நாட்களில் ரூபா 2,940,000 பெறுமதியான 04 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. |
| (vi) | 1988 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய 359 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபம் | வெலிகந்த பிரதேச செயலகம் | அரச நிறுவனங்களில் காணப்படுகின்ற நிலையான சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் நிலையான சொத்துப் பதிவேட்டினைப் பராமரிப்பதற்கும் அதனை நாளது வரையாக்குவதற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் புதிய அலுவலகக் கட்டிடம், பிரதேச செயலாளர்களின் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான காணி என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(2) ஆம் | தமன்கடுவ, லங்காபுர, திம்புலாகல பிரதேச | பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பாக ஏற்படுகின்ற கிரயங்கள், ஆதனங்களின் விபரம், காணி |

2010 இன் வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

**(அ) திட்டமிடலும் செயலாற்றலும்**

மாவட்ட செயலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்பணிகளை எதிர்வரும் வருடங்களில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட முறைமைகளைக் காட்டுகின்ற கூட்டுத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் நி.பி. 665(1) இன் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடத்தின் மாவட்டச் செயலகத்தின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள், கட்டுப்பாட்டு அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் வினைத்திறனான முறையில் நிறைவேற்றப்படுகின்றன என்பது புள்ளிவிபரங்களின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வங்கிக் கணக்கின் செயற்பாட்டுக் குறைபாடுகள்**

**(i) செம்மையாக்கக்கூடிய மீதிகள்**

2010 திசெம்பர் மாதத்திற்காக மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களினால் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக்கூற்றுக்களில் காணப்படுகின்ற செம்மையாக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

| | செம்மையாக்கல் தொடர்பான விபரம் | 6 – 12 மாதங்கள் | 1-3 வருடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | தேறாத வைப்புக்கள் | 335,172,017 | 179,053 | 335,351,070 |
| (ஆ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத | 570,700,128 | 1,086,230 | 571,786,358 |

புத்தகங்கள், அலுமாரி, பிளாஸ்டிக் கதிரைகள், வயர் கோட் மற்றும் அறிவித்தல் பலகைகள் போன்ற பொருட்கள் 2011 மார்ச் மாதம் வரையிலும் உரிய நலனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) எலஹெர பிரதேச செயலகத்தினால் பராமரிக்கப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் செயலகத்திற்குச் சொந்தமான ஏனைய கட்டிடங்கள், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 02 ஏக்கர் நிலப் பரப்பு என்பன நீண்டகாலமாகப் பராமரிக்கப்படுகின்ற போதிலும் அந்நிலப் பரப்பு மற்றும் கட்டிடங்களின் உரித்துக்கள் பிரதேச செயலகத்திற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2010 ஆம் ஆண்டின் போது எலஹெர பிரதேச செயலகத்தினால் 05 சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட ரூபா 1,301,683 தொகையான கொள்வனவுகள் தொடர்பாக கேள்விச் சபை மற்றும் தொழில்நுட்பக் குழு என்பவற்றின் செயற்பாடுகளின்றி இடம்பெற்றிருந்தன.

(vii) 2010 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் 02 பாடசாலைகளுக்கு ரூபா 142,500 தொகை செலவிடப்பட்டு சங்கீத உபகரணங்களின் கொள்வனவு, ரூபா 70,000 செலவில் நடன ஆடைத் தொகுதிகளின் கொள்வனவு என்பன எலஹெர பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அக்கொள்வனவுகளுக்காக கூறுவிலைகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(viii) எலஹெர பிரதேச சபைக்கு உபகரணங்கள் வழங்குவதற்காக மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ரூபா 50,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நடவடிக்கைகள் எலஹெர பிரதேச செயலகத்தினால் நிறைவேற்றப்படாமல் அப்பணம் காசோலை மூலம் பிரதேச சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) நட்டங்களும் இழப்புக்களும்**

---

(i) தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கீழே குறிப்பிடப்படுகின்றதன் பிரகாரம் நட்டங்களும் இழப்புக்களும் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2010.04.04 ஆந் திகதி ஜீப் வண்டி விபத்து - ரூபா 146,159

**(ஆ) உள்ளகக் கணக்காய்வு**

மாவட்ட செயலகத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் பொருத்தமான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் மாவட்ட செயலகத்தின் கணக்காய்விற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.